Australian Government

COVID-19 VACCINATION

# உங்களுடைய ‘ஸ்பைக்-வாக்ஸ் (மொடெர்னா) கோவிட்-19 தடுப்பூசி’யை நீங்கள் இட்டுக்கொண்ட பிறகு

கடைசிப் புதுப்பிப்பு: 2 செப்டம்பர் 2021

## இந்தத் தடுப்பூசியைப் பற்றி

இன்று நீங்கள் **‘ஸ்பைக்-வாக்ஸ் (மொடெர்னா)’ தடுப்பூசி**-யைப் பெற்றுள்ளீர்கள்.

‘கோவிட்-19’ காரணமாக நோய்வாய்ப்படுவதிலிருந்து மக்களைத் தடுக்க இந்தத் தடுப்பூசி மருந்தினால் இயலும். ‘மொடெர்னா’ ‘கோவிட்-19’ தடுப்பூசியில் உயிருள்ள வைரஸ் எதுவும் இல்லை, மற்றும் இதனால் உங்களுக்குக் ‘கோவிட்-19’ நோயைக் கொடுக்க இயலாது. ‘ஸார்ஸ்-கொவ்-2’ வைரஸ்-இன் ‘முள் புரதம்’ (spike protein) என்று சொல்லப்படும் முக்கியமான பகுதியின் மரபணுக் குறியீட்டினை இது கொண்டுள்ளது. இந்தத் தடுப்பூசியை இட்டுக்கொண்ட பிறகு, இந்த முள் புரதத்தின் பிரதிகளை உங்களுடைய சரீரம் உருவாக்கும். இதற்குப் பிறகு ‘ஸார்ஸ்-கொவ்-2’ வைரஸ்-ஐ எப்படி அடையாளம் கண்டு அதனோடு போரிடுவது என்பதை உங்களுடைய நோயெதிர்ப்பு முறைமை கற்றுக்கொள்ளும். இந்த மரபணுக் குறியீட்டினை சரீரம் விரைவில் நொறுக்கிவிடும்.

## தடுப்பூசியை இட்டுக்கொண்ட பிறகு நீங்கள் எதிர்பார்க்கவேண்டியது

எவ்வொரு தடுப்பூசிக்கும் இருப்பதைப் போல, ‘கோவிட்-19’ தடுப்பூசி ஒன்றை நீங்கள் இட்டுக்கொண்ட பிறகு சில பக்க விளைவுகள் உங்களுக்கு ஏற்படலாம்.

**‘மொடெர்னா’**-விற்குப் பிறகான **பொதுவான** பக்க விளைவுகளில் உள்ளடங்குவன:

- ஊசி இடப்பட்ட இடத்தில் வலி
- களைப்பு
- தலைவலி
- தசை வலி
- காய்ச்சல் மற்றும் குளிர்க்-காய்ச்சல்கள்
- மூட்டு வலி.

**‘மொடெர்னா’**-விற்குப் பிறகு **குறைவாய்க் காணப்படும் பொதுவான** பக்க விளைவுகளில் உள்ளடங்குவன:

- ஊசியிடப்பட்ட இடத்தில் சிவந்த தன்மை அல்லது வீக்கம்
- அக்குள் பகுதியில் வலி அல்லது நொய்வு
- குமட்டல்/வாந்தி
- பருத்துவிட்ட நிணநீர் முடிச்சுகள்.

இந்தப் பக்க விளைவுகள் பொதுவாக மிதமானவையாக இருக்கும், மற்றும் அவை பொதுவாக இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் மறைந்துவிடும். மற்ற பொதுவான தடுப்பூசிகளுடன் ஒப்பிடப்படும் பொழுது, இந்தத் தடுப்பூசியை இட்டுக்கொள்வதினால் சிலருக்கு சளிக்-காய்ச்சல் போன்ற அதி கணிசமான அறிகுறிகள் ஏற்படும், மற்றும் வழமையான அலுவல்களிலிருந்து விடுப்பு எடுத்துக்கொள்ளவேண்டிய தேவை அவர்களுக்கு எழலாம். எவ்வொரு மருந்தளவிற்குப் பிறகும் இந்த அறிகுறிகள் ஏற்படலாம், ஆனாலும், இரண்டாவது மருந்தளவிற்குப் பிறகு இவை ஏற்படுவது இன்னும் பொதுவானதாகும்.

தடுப்பூசியை இட்டுக்கொண்ட பிறகு ஊசி இறங்கிய இடத்தில் வலி, தலைவலிகள் அல்லது சரீர நோவுகள் உங்களுக்கு ஏற்பட்டால், நீங்கள் ‘பாரஸிடமோல்’ அல்லது ‘இபுப்ரோஃபென்’ ஆகியவற்றை எடுத்துக்கொள்ளலாம். மேலே சொல்லப்பட்டுள்ள அறிகுறிகள் சிலவற்றைக் குறைக்க இவை உதவும். தடுப்பூசியை இட்டுக்கொள்வதற்கு முன்பாக நீங்கள் ‘பாரஸிடமோல்’ அல்லது ‘இபுப்ரோஃபென்’ ஆகியவற்றை எடுக்கவேண்டியதில்லை. ஊசி இடப்பட்ட இடத்தில் வீக்கம் இருந்தால் ‘குளிர்த்-திண்டு’ (cold compress) ஒன்றை நீங்கள் பயன்படுத்தலாம்.

**‘மொடெர்னா’**-விற்குப் பிறகு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள **அரிதான** பக்க விளைவுகள்:

- ‘ஆனஃபிலாக்ஸிஸ்’ (anaphylaxis) எனப்படும் கடுமையான ஒவ்வாமை எதிர்வினை.
- ‘மையோகார்டைட்டிஸ்’ (myocarditis) (இதயத் தசை அழற்சி), மற்றும் ‘பெரிகார்டைட்டிஸ்’ (pericarditis) (இதயத்தின் வெளிப்பகுதியைச் சுற்றியுள்ள சவ்வு அழற்சி). இவை ஏற்பட்டுள்ளவர்கள் தொடர்ந்து நீண்ட-காலக் கண்காணிப்பில் இருந்துகொண்டிருந்தாலும், இவை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள தருணங்கள் மிதமானவையாக இருந்துள்ளன, மற்றும் இவை விரைவில் குணமடந்துள்ளன. இவை ஏற்படும் தருணங்கள் பெரும்பாலும் இரண்டாவது மருந்தளவிற்குப் பிறகு ஏற்படுகின்றன, மற்றும் இவை பெரும்பாலும் (30 வயதிற்குக் கீழ்ப்பட்ட) இள வயது ஆண்களுக்கு ஏற்படுகின்றன.

தடுப்பூசியை இட்டுக்கொண்ட பிறகு உங்களுக்குப் பின் வருவன ஏற்பட்டால், நீங்கள் மருத்துவ கவனிப்பினை நாடவேண்டும்:

- ஒவ்வாமை எதிர்வினை ஒன்று உங்களுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்று நீங்கள் நினைத்தால். மூச்சுத் திணறல், மூச்சிரைப்பு, வேகமான இதயத் துடிப்பு அல்லது மயக்கமாய்க் கீழே விழல் போன்ற தீவிரமான அறிகுறிகள் உங்களுக்கேற்பட்டால், 'மூன்று பூஜ்ய'(000)-த்தினை அழையுங்கள்
- நெஞ்சு வலி, அழுத்தம் அல்லது அசௌகரியம், ஒழுங்கற்ற இதயத் துடிப்பு, தவறும் இதயத் துடிப்புகள், அல்லது 'படபடக்கும்' இதயம், மயக்கம், மூச்சுத் திணறல் அல்லது சுவாசிக்கும்போது வலி ஆகியன உங்களுக்கு இருந்தால்
- ஏற்படவல்ல பக்க விளைவு ஒன்றைப் பற்றி நீங்கள் கவலைப்பட்டுக்கொண்டிருந்தால், அல்லது புதிய அல்லது எதிர்பாராத அறிகுறிகள் உங்களுக்கு ஏற்பட்டால்
- சில நாட்களுக்குப் பிறகும் மறையாத, தடுப்பூசியால் ஏற்பட்ட எதிர்பார்க்கப்பட்ட பக்க விளைவு ஒன்று உங்களுக்கு இருந்தால்.

அவசரமில்லாத அறிகுறிகளுக்கு உங்களுடைய வழமையான சுகாதாரப் பராமரிப்பு வழங்குநரை (பொதுவாக உங்களுடைய பொது மருத்துவர் (GP)) நீங்கள் பார்க்கலாம்.

## தடுப்பூசியின் பாதுகாப்பினைக் கண்காணித்தல் மற்றும் பக்க விளைவுகளைத் தெரியப்படுத்துதல்

சந்தேகிக்கப்படும் பக்க விளைவுகளை நீங்கள் உங்களுடைய தடுப்பூசி வழங்குநருக்கு அல்லது மற்ற சுகாதாரத் தொழிலருக்குத் தெரியப்படுத்தலாம். இதற்குப் பிறகு அவர்கள் உங்கள் சார்பாக உங்களுடைய மாநில அல்லது எல்லைப்பகுதியின் சுகாதாரத் துறைக்கு அல்லது நேரடியாக 'மருத்துவ-சிகிச்சைப் பொருட்கள் நிர்வாகம்' (Therapeutic Goods Administration (TGA).) எனும் அமைப்பிற்கு சம்பிரதாயப்படியான அறிக்கை ஒன்றை ஏற்படுத்துவார்கள்.

இதை நீங்களாகவே தெரிவிக்க விரும்பினால், TGA-யினரது வலைத்தலத்திலுள்ள reporting suspected side effects associated with a COVID-19 vaccine webpage ('கோவிட்-19 தடுப்பூசி சம்பந்தமாக சந்தேகிக்கப்படும் பக்க விளைவுகளைத் தெரிவித்தல்) எனும் பக்கத்திற்குச் சென்று அங்கு தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்.

## தடுப்பூசி இட்டுக்கொண்ட பிறகான 'கோவிட்-19' நோயறிவுச் சோதனை

'கோவிட்-19' தடுப்பூசியேற்றத்தின் பக்க விளைவுகள் சில 'கோவிட்-19' நோயறிகுறிகளைப் போலத் தோன்றக்கூடும் (உதாரணமாக, காய்ச்சல்). இருந்தாலும், 'மொடெர்னா'-வில் உயிருள்ள வைரஸ் எதுவும் கிடையாது, மற்றும் இதனால் 'கோவிட்-19' நோயை ஏற்படுத்த இயலாது. பின் வரும் தருணங்கள் ஏற்பட்டால், 'கோவிட்-19' நோயறிவுச் சோதனையை மேற்கொள்ளவேண்டிய தேவையோ, உங்களைத் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவையோ உங்களுக்கு இல்லாமல் இருக்கலாம்:

- தடுப்பூசி இட்டுக்கொண்ட பிறகு முதல் இரண்டு நாட்களில் காய்ச்சல், தலைவலி அல்லது அசதி போன்ற பொதுவான அறிகுறிகள் உங்களுக்கு ஏற்பட்டால், மற்றும்
- சுவாசப் பிரச்சினை சம்பந்தப்பட்ட அறிகுறிகள் ஏதும் உங்களுக்கு இல்லை என்று உங்களுக்கு உறுதியாகத் தெரிந்தால் (உதாரணமாக, நாசிக் கசிவு, இருமல், தொண்டை வலி, வாசனைத் திறன் இழப்பு அல்லது சுவைத் திறன் இழப்பு).

இருந்தாலும், மிகச் சமீபத்திய தகவல்களைப் பற்றி உங்களுடைய மாநிலத்தில்/எல்லைப்பகுதியில் தற்சமயம் நடப்பிலுள்ள வழிகாட்டல்கள் என்னவென்று நீங்கள் சோதித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். நீங்கள் வசிக்கும் உள்ளூர்ப் பகுதியில் 'கோவிட்-19' நோயின் திடீர்-வெடிப்பு ஒன்று ஏற்படும் தருணத்தில் இந்த அறிவுரையில் மாற்றம் ஏற்படலாம். மற்ற தேவைப்பாடுகள் உங்களுக்குப் பொருந்தினால், உதாரணத்திற்கு, 'கோவிட்-19' தொற்று உள்ள ஒருவருடன் நீங்கள் நெருங்கிய தொடர்பில் இருந்திருக்கும் ஒருவர் என்றால், 'கோவிட்-19' நோயறிவுச் சோதனை ஒன்றை நீங்கள் இப்போதும் மேற்கொள்ளவேண்டியிருக்கலாம். உங்களுக்கு சந்தேகமாக இருந்தால், மருத்துவ மதிப்பீட்டினை நாடுங்கள்.

## உங்களுடைய இரண்டாவது சந்திப்புவேளையினை நினைவில் கொள்ளுங்கள்

'மொடெர்னா'-வின் இரண்டு மருந்தளவுகளை நீங்கள் பெறவேண்டியது முக்கியம். இந்த மருந்தளவுகள் பொதுவாக 4-6 வார கால இடைவெளியில் கொடுக்கப்படும், ஆனால், விசேடமான சூழல்களில் இதை விட நீண்ட இடைவெளிகள் சிபாரிசு செய்யப்படலாம். 'கோவிட்-19'-இற்கு எதிரான பாதுகாப்பு நீடிக்கும் காலத்தினை அதிகரிக்கும் சாத்தியம் இரண்டாவது மருந்தளவிற்கு இருக்கிறது.

## சந்திப்புவேளையின் பொழுது நீங்கள் கொடுக்கும் தகவல்கள் பயன்படுத்தப்படும் விதம்

உங்களைப் பற்றிய தகவல்கள் எவ்வாறு சேகரிக்கப்படும், இருப்பில் வைக்கப்படும் மற்றும் பயன்படுத்தப்படும் என்பதைப் பற்றிய தகவல்களுக்கு https://www.health.gov.au/using-our-websites/privacy/privacy-notice-for-covid-19-vaccinations எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.